**Principal District Munsif Court, Sankarankovil.**

தேதி : 23.09.2022
அ.வ.எண். 237/2014
<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

நான் 10 வகுப்பு படித்தவுடன் P.S college டிப்ளமோ படித்துள்ளேன். 5ம் வாதி ராமையா என்னுடைய தந்தையார் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் செண்பகண்ணுத்தேவர். என்னுடைய தாத்தா கிராம கர்ணமாக பணிபுரிந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா நான் சிறுவயதாக இருக்கும்போதே இறந்து விட்டார். பிராதில் 7 தபசிலாக சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பாக புல எண்.270/4க்கு 24 1/2 ஏர்ஸ் சுப்புத்தேவர் மகன் பெரியசாமி தேவர் பெயரில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெரியசாமித்தேவரின் மகன்தான் தவசிக்கண்ணுத்தேவர் என்றால் சரிதான். நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பட்டா 1980 முதல் 1985 வரை நடந்தது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7ல் கோட்டாட்சியரிடம் நடவடிக்கை எடுக்க சொல்லி நான்தான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 அடிப்படையில் அதில் பெரியசாமி வகையறாவிடமிருந்து 2ம் வாதியான சாமிநாதன் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல என் அம்மாவிடமிருந்துதான் சொத்தை வாங்கினார்.

2. மேற்படி வா.சா.ஆ.7 உத்தரவில் பெரியசாமி வாரிசுகளிடமிருந்துதான் எனது தந்தை ராமையா மற்றும் எனது தாயார் பரமு அம்மாள் கிரையம் பெற்றார்கள் என்று உள்ளது ஆனால் நான் தாக்கல் செய்த ஆவணம்படி குற்றாலபாண்டியன் மற்றும் தங்கபாண்டியன்

ஆகியோரிடமிருந்து என்னுடைய தாயார் மற்றும் தந்தை அந்த சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. குற்றாலபாண்டியன் மற்றும் தங்கபாண்டியன் பெரியசாமித்தேவரின் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு விபரங்கள் அனைத்தையும் எங்கள் வழக்கறிஞரிடம் நாங்கள் 5ம் பேர் சேர்த்து தான் சொன்னோம். 1ம் தபசில் சொத்து என் தாயார் 30 செண்ட் இடத்தில் வடபாதியின் கீழ்பாதி 14 செண்ட் நிலத்தை 2 முதல் 4 வாதிகளுக்கு தபசில் சொத்தில் 2 முதல் 4 அயிட்ட சொத்தாக நன்கொடை கொடுத்தார்கள் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தில் 2ம் வாதி நன்கொடை வாங்கிய பின் வீடு கட்டிவிட்டார் என்றால் சரிதான். 2ம் வாதி கட்டியுள்ள வீட்டிற்கு வடபுறத்தில் முன்னால் சேர்மன் துரைராஜ் இடம் உள்ளது என்றால் சரிதான். 2ம் வாதியின் இடத்தை காலிமனையாகதான் 2ம் தபசிலில் காட்டியுள்ளோம் என்றால் சரிதான் ஆனால் 2ம் வாதி 1997ல் வீடு கட்டியுள்ளார். 2ம் தபசில் சொத்தின் வடபுறம் பரமு அம்மாள் இடம் உள்ளது என்று சொல்லிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தில் மீதமுள்ள 16 செண்ட் இடத்தில் தென்னம்தோப்பு உள்ளது என்றால் சரியல்ல. 4 தென்னைமரங்கள் மட்டும்தான் உள்ளது. எங்களுக்கு நன்கொடை கொடுத்த சொத்தில் வீடு கட்டியிருக்கிறோம் அது முன்பகுதியில் 10 முதல் 15 அடி வரை முற்றவெளி விட்டு இருக்கிறோம் என்றால் சரிதான்.

3. எனக்கு 4 1/2 செண்ட் இடமும், 2ம் வாதிக்கு 3 செண்ட் இடமும், 4ம் வாதிக்கு 6 செண்ட் இடமும் மொத்தம் 13 1/2 செண்ட் இடத்தை எனது தாயார் எங்களுக்கு நன்கொடை கொடுத்தார் என்றால் சரிதான். எனது தாயார் கிரையம் வாங்கின மொத்தம் 30 செண்ட் இடத்தில் எங்களுக்கு நன்கொடை கொடுத்த இடம் 13 1/2 செண்ட் இடம் போக பாக்கி உள்ள இடம் 16 1/2 செண்ட் என்றுதான் இருக்கவேண்டும் ஆனால்

5ம் தபசிலில் 17 செண்ட் என்று காட்டப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். 5ம் தபசில் சொத்தின் வடபுற மால் துரைராஜ் வகையறா இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5ம் தபசிலின் மேல்புறம் தென்வடல் ஓடை செல்கிறது என்றால் சரிதான். கீழ்புறம் 4ம் வாதியின் நிலம் என்றால் சரிதான். 5ம் தபசில் சொத்திற்கு மேற்சொன்னவாறு நான்குமால்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 5ம் தபசில் சொத்துக்களை நாங்கள் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் எக்காலத்திலும் இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான். 1 முதல் 5 தபசில் சொத்திற்கு நான் கோரியுள்ள பரிகாரம் தவறுதான் என்றால் சரிதான். பிராதில் அ பரிகாரம் முதல் ஈ பரிகாரம் வரை கேட்டுள்ளது தவறு என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த வழக்குமூலமும் தவறானது என்றால் சரியல்ல. தவறான வழக்குமூலம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

4. 6ம் தபசில் சொத்து என் தந்தை 5ம் வாதி குற்றாலபாண்டியன் மற்றும் தங்கபாண்டியன் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். குற்றாலபாண்டியன் மற்றும் தங்கபாண்டியன் ஆகியோருக்கு 6ம் தபசில்சொத்து பாத்தியப்பட்டதை காட்டுவதற்கு எந்தவொரு முன் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குற்றாலபாண்டியன் மற்றும் தங்கபாண்டியன் ஆகியோரிடமிருந்து வாங்கிய சொத்தை சரியல்ல என்று கூறி 3 வருடத்திற்கு நாங்கள் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 7ம் தபசில் சொத்தை என் தாயாரான பரமுஅம்மாள் 1ம் வாதியிடமிருந்த வா.சா.ஆ.6ன் மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். எனது அப்பா வா.சா.ஆ.5ன்படி கிரையம் வாங்கிய பிறகுதான் எனது அம்மா 2001ல் கிரையம் பெற்றார்

என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் மேற்குபுற மால் எனது அம்மாவின் இடம் என்று காட்டப்பட்டுள்ளது ஆனால் எனது அம்மா 2001 ல்தான் கிரையம் பெற்றார் அதனால் மேற்குபுற மால் வா.சா.ஆ.5 ல் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் 6 ம் தபசில் சொத்தை பரிச்சமில்லாத நபரிடமிருந்து கிரையம் பெற்றதால் 6 ம் தபசில் சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையில்லை என்றால் சரியல்ல. குற்றாலபாண்டியன் மற்றும் தங்கபாண்டியன் ஆகியோரிடமிருந்து எனது அப்பா கிரையம் பெற்ற சொத்திற்கு முன் ஆவணங்கள் எதுவும் வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா நடமாடும் நிலையில் இருக்கிறாரா என்றால் கால்மூட்டு வலியால் நடமாட முடியாமல் இருக்கிறார். 6 ம் தபசில் சொத்தை பொறுத்துதான் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை என்றால் சரிதான்.

5. சர்வே எண்.270/4 ல் பிரதிவாதிகள் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்ட காரணத்தினால்தான் வா.சா.ஆ.7 நடவடிக்கை எடுத்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரையம் கொடுத்த நபர் எனது தாயாருக்கு மொத்த சொத்தில் வடபாதி கிரையம் கொடுத்த தவசிக்கண்ணுத்தேவரின் உடன்பிறந்த சகோதரியின் மகள் பெரியதாய் என்றால் சரிதான். மேற்சொன்ன பெரியதாயிடமிருந்து பிரதிவாதிகள் 7 ம் தபசில் சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான்.வா.சா.ஆ.6 ன் மூலம் பெரியதாயிடமிருந்து என் தாயார் பரமு அம்மாள் சர்வே எண்.270/4 ல் மொத்த விஸ்தீரணம் 60 செண்டில் தென்கடைசி 15 செண்டிற்கு வடபுறம் கிழமேலாக 15 செண்டைதான் என் தாயார் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் கண்ட நான்குமால் சரிதானா என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் தெற்குபுற மாலானது எனது கைவசம் இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**